## மொறட்டுவ பல்கலைக்கழகம் - 2018

-------------------------------------------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---------------------------------------------------------

மொறடுவ பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளினதும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மொறடுவ பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---------------------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக் கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்கீடு செய்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக் கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு

எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன், அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக் கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக் கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| உரிய நியமங்களுடன் தொடர்பு உட்பட இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிலையான சொத்துக்களில் காட்டப்பட்டுள்ள நூலகப் புத்தகங்கள் 2013 ஆண்டின் பின்னர் பௌதீக ரீதியாக கணிப்பீடு மேற்கொண்டிருக்க வில்லை. மேலும், இலங்கைப் பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 7 இல் 65 பந்தியின் பிரகாரம் பயன்தரு வாழ்க்கைக் காலம் ஆண்டு தோரும் மீளாய்வு செய்யப்படா மையால் ரூபா 276,364,317 தொகை கிரயத்தையுடைய ஆதனங்கள் பொறித்தொகுதி கள் மற்றும் உபகரணங்கள் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முற்றாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு காணப்பட்டது. அதன் காரணமாக பயன்படுத்தக் கூடிய வாழ்க்கை காலத்தை மதிப்பீடு செய்யும் போது ஏற்பட்டுள்ள தவறினை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நூலகப் புத்தகங்கள் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் இறுதிக் கணக்குகளில் சித்தரித்துக் காட்டுவது தொடர்பாக 139 ஆவது நிதிக் குழுவில் கலந்துரை யாடப்பட்டதுடன், அங்கு பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் படி நூலகப் புத்தகங்களின் கிரய மாதிரியின் படி (cost Model) இறுதிக் கணக்குகளில் சித்தரித்துக் காட்டுவதற்காக பரிந்துரைக்கப்பட்டதுடன் 457 ஆவது நிருவாக குழுவின் மூலம் அது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வெளிப்படுத்தல்கள் கணக்கு கொள்கையின் கீழ் 17 இலக்கத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நூலகப் புத்தகங்களின் பெறுமானத் தேய்வு மேற்கொள்ளல் தொடர்பாக கணக்கீட்டுக் கொள்கை மாற்றம் ஒன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் செயற்படுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) பல்கலைக் கழகத்தினால் வெளிநிறுவனம் ஒன்றிற்கு எதிராக ரூபா 5 மில்லியன் நஷ்டஈடு கோரி மொறட்டுவ மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு ள்ளதுடன் அந்த வழக்கின் எதிர் தரப்பினரினால் அந்த வழக்கு தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் மேன் முறையீடு ஒன்று சமர்ப்பித்திருந்தது. இது தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இல் பிரிவு 100 இன் பிரகாரம் வெளிப்படுத்தல் ஒன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்படவில்லை. | நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பராமரிப்பு களஞ்சியத்தில் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட இருப்பின் மெய்மையாய்வு செய்யப்பட்ட பெறுமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை. | பராமரிப்பு களஞ்சியத்தில் 2018.12.31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட இருப்பின் பெறுமதியை 2019 ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்பு மெய்மையாய்தல் செய்யும் போது உப களஞ்சிய இருப்பையும் இறுதி இருப்புகளில் உட்படுத்த வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. | | | |
| (அ) | ஏனைய பெறுவனவுகள் | 6,951,712 | காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 6,951,712 தொகைக்கான ஏனைய பெறுவுனவுகளின் தேறிய பெறுமதியை உறுதிப் படுத்தும் அட்டவணைகள் அல்லது உரிய சான்றுகள் | இது அதிகமான பேரேட்டுக் கணக்குகள் தொடர்புடைய தேறிய பெறுவனவுகளின் கூட்டுத் தொகையாக இருந்ததுடன் அதற்காக அட்டவணை ஒன்று தயாரிப்பதில் செய்முறை சிக்கல்கள் காணப்படுவதுடன் எவ்வாறாயினும் எதிர் காலத்தில் இந்த தேறிய பெறுவனவு களின் அட்டவணை ஒன்று தயாரித்து சமர்ப்பிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிட்டுள்ள பெறுமதிகளை உறுதிப்படுத்துவதற்காக தேவைச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | உரிய வாடகை உடன்படிக்கை | -- | பல்கலைக் கழகத்தில் நடாத்தப்பட்டு வரும் யுனி கன்ஸல்டன்ஸி எனும் தனியார் நிறுவனத்திற்கு பல்கலைக் கழகத்தினால் மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்கியிருந்த கட்டிடத்திற்கான வாடகை உடன்படிக்கை. | UNIC நிறுவனத்தினால் தற்போது மொட்டுவ பல்கலைக் கழகத்திற்கு மாதாந்தம் ரூபா 30,000 செலுத்தப்படுவதுடன் அதனை உறுதிப்படுத் துவதற்கான வேலைப் பொறியியலாளர் மொறட்டுவ பல்கலைக் கழகம் மூலம் யுனி கன்ஸல்டன்ஸி ஸர்வர் பணிப்பாளருக்கு அனுப்பிய 2015.05.16 கடிதத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட்டுள்ள பெறுமதிகளை உறுதிப்படுத்து வதற்குத் தேவையான சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | புனர்நிர்மாண மற்றும் அபிவிருத்தி செயற்திட்ட ங்களின் பல்வேறு வேலை களுக்காக ஒதுக்கிய பணம் | 39,344,250 | செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான கோவைகள் | பதில் அனுப்பி இருக்க வில்லை. | நிதிக்கூற்றுக்கள் குறிப்பிட்ட பெறுமதிகளை உறுதிப்படுத்துதற்கு தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6 தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக் கழகத்தின் நிறுவப்பட்டுள்ள யுனி கன்ஸல்டன்ஸி கம்பனியின் அமைப்பு விதிகளில் நிருவாக சபையின் அங்கத்தர் இருவர் என பல்கலைக் கழகத்தின் நிதிவாளரின் மற்றும் பதிவாளர் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. | பதில் அளிக்கப்படவில்லை. | தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்தவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 21(ஆ) | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம், அலகுக் கிரயம் ரூபா 5,000,000 தொகையினை மிகைக் காத மதிப்பீட்டை உடைய செயற்திட்டங்கள் அல்லது வேலை விடயங்கள் கூட்டு ஏற்பாடாக அன்றி வெவ் வோறான விடயங்களாக மதிப்பீட்டில் காட்டப்பட வேண்டுமெனினும், 2018 ஆண்டிற்கான புனர்நிர்மாண மற்றும் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டதின் கீழ் ரூபா 42.06 மில்லியன் தொகைக்கான பல்வேறு வேலைகள் கூட்டு ஏற்பாடு என மதிப்பீடு களில் சமர்ப்பித்திருந்தது. | பதில் அனுப்பியிருக்க வில்லை. | உரிய சட்ட விதிகளின் படி செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்திற்கு சொந்தமாகக் காணப்படும் நிலையான சொத்துக்கள் தொடர்பாக அனைத்து விபரங்களையும் உட்படுத்தி நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டுமெனினும், அவ்வாறான பதிவேடு ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | பல்கலைக் கழகத் தினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டு வருகின்றது. | நிலையான சொத்துக்களின் பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டு அதனை நாளது வரை பேணப்பட வேண்டும். |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/02 இலக்க அரச கணக்கு சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் கணினிகள், துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்க வில்லை. | அனைத்து பீடங்கள், திணைக்களங்க ள் மற்றும் பிரிவுகளி னால் சொத்துக்கள் பதிவேடு பேணப்படுவதுட ன் அங்கு அந்த சொத்துக்கள் பதிவேட்டில் இந்த கணினிகள் துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் கொள்வனவு செய்தல், பொறுப்பு, அப்புறப்படுத்தல் தொடர்பான தகவல்கள் நாளது வரை ஆக்கப்படு கின்றது. | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். |
| (ஈ) | பல்கலைக் கழகங்கள் ஆணைக்குழு நிதிச் சுற்றறிக்கை கடிதத்தின் இலக்கம் 05/2017 | வருடாந்த பாதீட்டின் ஊடாக பல்கலைக் கழகத்தின் மூலதன செயற்திட்டங்களுக்காக நிதி ஒதுக்கும் செய்முறையில் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக் குழுவின் நிதிச் சுற்றறிக்கை கடித இலக்கம் 05/2017 இல் 3 ஆம் பந்தியில் ஒழுங்குபடுத்தல்களுக்கு புறம்பாக செயற்பட்டு ள்ளதெனவும் மூலதன செயற்திட்டங்களுக்காக நிதி ஒதுக்கும் செய்முறை முறையான மேற்பார்வையுடன் மற்றும் வெளிப்படையான தன்மையுடன் செயற்படுத் தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | பதில் அளித்திருக்க வில்லை. | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 98,671,571 இற்கான பற்றாக்குறை ஒ்னறு காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 58,682,610 தொகையாக இருந்தது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 39,988,961 இற்கான வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஆண்டிற்கான வருமானம் ரூபா 517,089,535 இனால் அதிகரித்திருந்த போதிலும் ஆண்டிற்கான செலவுகள் ரூபா 557,078,496 இனால் அதிகரித்தல் முக்கியமான காரணமாகியுள்ளது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவு விடயங்களில் போக்குப் பகுப்பாய்வு

2017 ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் முதலீட்டின் மூலம் வட்டி வருமானம் 69 சதவீதத்தினாலும் பதவியணி சம்பளம் 23 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

#### (அ) நடைமுறை சொத்துக்கள் விகிதாசாரம்

முன்னைய ஆண்டின் போது 0.38 தொகையாக இருந்த நடைமுறை விகிதாசாரம் நடைமுறை ஆண்டில் 0.33 தொகையாக காணப்பட்டது.

#### (ஆ) விரைவுச் சொத்து விகிதாசாரம்

முன்னைய ஆண்டின் விரைவுச் சொத்து விகிதாசாரம் 0.35 தொகையாக இருந்த போதிலும் நடைமுறை ஆண்டில் விகிதாசாரம் 0.31 தொகையாக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கல்வி விடுமுறை பெற்று வெளிநாடு சென்றிருந்த வளவாளர்கள் 32 பேர் உரிய உடன்படிக்கைகள் மற்றும் பிணை முறியினை மீறியதன் காரணமாக 2018 திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 61,422,362 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. அவற்றில் 10 வருடங்களை கடந்துள்ள 06 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,473,002 தொகை மற்றும் 18 உத்தியோகத்தர்களிடம் | உடன்படிக்கைகள் மற்றும் பிணை முறிகளை மீறிய உத்தியோகத்தர்களின் அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்காக சமர்ப்பி த்திருந்த பின்னிணைப் பின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கைகள் மற்றும் பிணை முறிகளை மீறிய உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட வேண்டிய ரூபா 29,003,867 தொகையினை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்க வில்லை. உத்தியோகத்தர்கள் 08 பேரின் கூட்டுத்தொகை ரூபா 20,808,390 தொகையினை பல்கலைக்கழக ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்து அறவீடு செய்வதற்காக அறிவிக்கப்பட்டு ஒரு வருடத்தை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் அதனை அறவீடு செய்வதற்காக போதியளவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | வெளிநாட்டு கல்வி விடுமுறை பெற்றிருந்த போதனாசிரியர் ஒருவர் உடன்படிக்கை மீறிய காரணத்தினால் அறவிடப்பட வேண்டிய ரூபா 4,093,176 தொகையினை பிணையாளரிடம் அறவீடு செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்றின் போது பிரதான உடன்படிக்கை கையொப்ப்ம் இடுவதற்கு முன்னர் பிணை உடன்படிக்கை கையொப்பமிடல் மற்றும் இலக்கத்தினால் எழுதப்பட்ட பெறுமதியை உறுதிப்படுத்து தவற்காக பல்கலைக் கழகத்திற்கு முடியாமல் இருந்தது என்ற காரணங்களி னால் பிணையாளர்களில் பொறுப்புக்களில் இருந்து நீங்குகின்றனர் என நீதிமன்ற தீர்ப்பு வெளியிட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டி ருந்தது. பல்கலைக் கழகத்தில் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டிய உத்தியோகத்தர் களினால் பொறுப்பற்ற முறையில் செயற்பட்டிருந்த மையால் பல்கலைக் கழகத்திற்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு முடியாது இருந்தது. | இந்த உடன்டிபக்கை கையொப்பமிடும் சந்தர்ப்பங்களில் பல்கலைக் கழகத்தில் சேவையாற்றிய குறிப்பிட்டு பொறுப்புச் சொல்ல வேண்டிய ஆட்கள் தற்போது மொறட்டுவ பல்கலைக் கழகத்தில் சேவையில் இருந்து விளகிச் சென்றுள்ளனர் எனவும் அது தொடர்பாக தீர்மானம் ஒன்று எடுப்பதற்கு மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்கு முடியாதுள்ளது. | உடன்படிக்கைகள் கையொப்பமிடும் போது பொறுப்புடன் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | யுனி கன்ஸக்டன்ஸி கம்பனிக்கு சட்ட சட்டகம் ஒன்று ஏற்படுத்து வதற்காக பொது முயற்சிக் குழுவினால் பல்கலைக் கழகத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் ஒன்று பெற்றுக் கொள்ளுமாறு கட்டளை இடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2019 மே 16 திகதி வரை அவ்வாறு செய்திருக்கவில்லை. | UNIC நிறுவனத்துடன் மொறட்டுவ பல்கலைக் கழகம் கையொப்பமிடு வதற்கு விதிக்கப் பட்டிருந்த உடன்படிக்கை 2019.05.16 திகதி கையொப்பமிடப்பட்டதுடன் அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெறுவதற்காக இது வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அமைச்சரவை அங்கீகாரம் பெறுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக் கழகத்திற்கு Lease Line Access வசதிகளை இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் ஊடாக பெற்றுக் கொள்வதற்காக இயலுமை தொடர்பாக முறையான மதிப்பாய்வு ஒன்று மேற்கொள்ளாமல் பல்கலைக் கழகங்கள் மானிய ஆணைக் குழுவின் உப தலைவர் மற்றும் பல்கலைக் கழகத்தின் போதனாசிரியர்கள் அங்கத்துவம் வகிக்கும் LEARN எனும் தனியார் கம்பனியில் இருந்து பெற்றிருந்தது. அதற்காக 2016 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை முறையே ரூபா 33,430,467 தொகை ரூபா 41,650,975 தொகை, ரூபா 47,215,767 தொகை மற்றும் ரூபா 34,188,337 தொகை குறிப்பிட்ட கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது. | இலங்கை டெலிகொம் நிறுவனத்தில் இருந்து வழங்கும் Lease Line வசதிகளில் கல்விசார் விடயங்களின் தேவையினை சேவைகள் மற்றும் வசதிகள் வழங்கப்படமாட்டாது என LEARN நிறுவனத்தில் இருந்த அந்த வசதிகள் பெறப்பட்டது. | Lease Line Access வசதிகள் இலங்கை டெலிகொம் நிறுவனத்தில் இருந்து நேரடியாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பல்கலைக் கழகம் மற்றும் கோட்ஜென் இன்டநெஷனல் கம்பனியுடன் புலமைச் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொண்டிருந்த உடன்படிக்கைகளை பரிசோதனை செய்த போது பல்கலைக் கழகத்தினால் புலமை சொத்துக்கள் தொடர்பாக அங்கீகரிக்கப் பட்டிருந்த கொள்கைக் கோப்பின் பிரகாரம் புலமை சொத்துக்களின் உரிமையை பல்கலைக் கழகத்தினால் தடுத்து வைக்கப்பட வேண்டி யிருந்ததுடன் அதற்கு இணங்காமல் பல்கலைக் கழகத்திற்கு எந்த ஒரு நலனும் பெற்றுக் கொள்ளாமல் கோட்ஜென் இன்டநெஷனல் கம்பனியுடன் உடன்படிக்கையொன்று அணுகியிருந்தது. | இந்த உடன்படிக்கை மொறட்டுவ பல்கலைக் கழகத்தின் புலமை ஆதனங்களுக்கான கொள்கைகள் கோவையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு நிருவாக சபையின் அங்கீகாரத்துடன் குறிப்பிட்ட உடன்படிக்கையை அணுகியுள்ளது. | புலமை ஆதனங்களின் உரிமையை பல்கலைக் கழகத்தினால் தடுத்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உடன்படிக்கை மேற்கொள்ளும் போது விளைவுகள் பல்கலைக்கழகத்திற்கு அனுகூலமானவை என கண்டறிந்து செயற்படு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | புதிய உணவக தொடர் கட்டிடத்திற்குத் தேவையான மேசைகள் மற்றும் கதிரைகள் அரச பெறுகை வழிகாட்டல் கோவைக்கு புறம்பாக வாடகை அடிப்படையில் பெற்றிருந்த காரணத்தினால் பல்கலைக் கழகத்திற்கு ரூபா 745,920 இற்கான நிதி நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக மேறகொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணையின் போது குற்றச் சாட்டுக்களுக்கு ஆளாகியிருந்த உத்தியோக த்தர்களை விடுவிப்பதற்காக போதியளவு சான்றுகள் சமர்ப்பித்திருக்காத போதிலும் 2017 ஜனவரி 04 திகதிய 431 மற்றும் 2018 அக்தோபர் 10 திதகிய 453 நிருவாக சபை தீர்மானத்தின் மூலம் அனைவரும் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப் பட்டிருந்தனர். | இணங்குவதாக | நடைமுறையிலுள்ள சட்டங்கள், விதிகளின் படி செயற்பட வேண்டும். |

**3.3 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சில் இருந்து ரூபா 15 மில்லியன் தொகை மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்திலிருந்து ரூபா 25 மில்லியன் நிதிப் பங்களிப்பின் மூலம் மொறட்டுவ பல்கலைக் கழகத்தின் பொறியியல் வடிவமைப்பு பிரிவிற்கு நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 40 மில்லியன் பெறுமதியான Digital Rapid Prototyping and Manufacturing System Viper இயந்திரம் 2015 ஆண்டு முதல் கணக்காய்வுத் திகதியாகிய 2019 ஜனவரி 11 திகதி வரை குறை பயன்பாட்டுடன் காணப்பட்ட துடன் குறிப்பிட்ட காலத்தில் சேவை பராமரிப்பு நடைபெறாமையால் இயந்திரம் செயற்படாத நிலைமையை அடைந்திருந்தது. | இயந்திரத்தின் பராமரிப்பு கிரயத்திற்காக மாத்திரம் ரூபா 1,200,000 தொகை தேவைப்பட்டிருந்ததுடன் வடிவமைப்பு நிலைப் பகுதி ஊழியர்களின் சம்பளத்திற்காக ஏற்பாடுகள் ஒதுக்கு வதற்கும் பணம் தேவையாக இருந்தது. 05 வருடங்களின் மொத்த உழைப்பு பராமரிப்பு அலுவல் களுக்காக மாத்திரம் போதியதாக காணப்பட்டது. மேம்பாட்டு அலுவல் களுக்காக மேலதிக வருமானம் ஒன்று கிடைத்திருக்கவில்லை எனவும், பொறியியல் வடிவமைப்பு நிலையத்தை மூடிவிடுதல் பல்கலைக் கழக நிறுவாகத்தினால் மேற்கொள்ளளப்பட்ட தெனவும் மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் பொறியியல் வடிவமைப்பு முகாமைத்துவ சபை மற்றும் பொறியியல் பீட சபையின் பரிந்துரையின் மீது நிருவாக சபையின் அங்கீகாரத்துடன் மற்றும் குறிப்பிட்ட நடவடிக்கை முறையின் கீழ் ஆகும். | Digital Rapid Prototyping and Manufacturing System Viper இயந்திரம் மீண்டும் செயற்படு நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அது தொடர்பாக மதி உரைஞர் ஒருவரின் சேவையை பெற்று முன் நடவடிக்கை திட்டமிடப்பட வேண்டி இருந்தது மற்றும் அது தொடர்பாக குறிப்பிட்ட இயந்திரத்தை வழங்கி யிருந்த நிறுவனத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2014 அரச ஏற்பாடுகளின் மூலம் வழங்கியிருந்த ரூபா 143.9 இற்கான மதிப்பீட்டுப் பெறுமதிக்கு நிர்மாணித்திருந்த கட்டிட நிர்மாணக் கலை விரிவுரை மண்டபக் கட்டிடம் கணக்காய்வுத் திகதியாகிய 2019 பெப்ரவரி 28 திகதி அளவிலும் பயன்படுத்தி இருக்கவில்லை. | நிதி ஏற்பாடுகள் இன்மையால் பூர்த்தி செய்திருக்காத பகுதியாகிய உள்ளக பிரித்தல் (Interior Partitioning) சிவிலின், கழிப்பறைக்கு மின்சாரம் மற்றும் நீர் வழங்கள் போன்ற அத்தியவசிய பகுதிகளின் காரணமாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் பயன்படுத்த முடியாதுள்ளது. | கட்டிட நிர்மாணக் கலை விரிவுரை மண்டபத்தை விரிவுரை களுக்காக ஈடுபடுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) பல்கலைக் கழகத்தின் உணவகத்தில் இருந்து அகற்றப்படும் கழிவுப் பொருட் களின் மூலம் உயிர்வாயு உற்பத்தி செய்து அந்த வாயு உணவத்தின் உணவு சமைப்பதற்காக பயன்படுத்து வதற்காக 2016 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த உயிர்வாயு முறைமைக்காக மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 1.3 தொகை செலுத்தப் பட்டிருந்த போதிலும் நிர்மாண வேலைகளின் வழுக்கள் காரணமாக தொடர்ந்தும் செயற்படாது காணப்பட்டது. | எதிர்காலத்தில் உயிர்வாயு முறைமை யின் கொள்திறன் அதிகரிக்கும் விதத்தில் முறைமையை மீண்டும் அபிவிருத்தி செய்வதற்காக திட்டமிடப் பட்டிருந்தது. | உயிர்வாயு முறைமையை பயன்படுத்தக் கூடிய விதத்தில் தயாரித்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 செயற்திட்டங்கள் மற்றும் மூலதன வேலைகளின் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆரம்ப மதிப்பீடு ரூபா 159.7 மில்லியன் தொகைக்கான பல்கருமங்களுக்குமான பொறியியல் பீட கட்டிடம் 2014 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2015 பெப்ரவரி 25 திகதி பூர்த்தி செய்ய வேண்டி இருந்தது. 2016 திசெம்பர் 25 ஆம் திகதி மேலும் நிறைவேற்றப்பட வேண்டிய வேலைப் பகுதிகள் காணப்பட்ட போதும் பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப் பட்டடிருந்தது. அச் சந்தர்ப்பம் வரை கட்டிடத்திற்காக ரூபா 168.2 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் இந்த மீதியாக உள்ள வேலையை பூர்த்தி செய்யப்படாமல் கட்டிடத்தை பயன்படுத்த முடியாதிருந்தது. | உத்தேச கட்டிடம் நிர்மாணித்தல் மற்றும் உரிய பெறுகை அலுவல் களின் போது அவற்றிற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள் போதியளவினதாக காணப்படாமையால் அந்த செயற்திட்டங்கள் மற்றும் நோக்கெல்லை களில் மாற்றங்களை ஏற்படுத்தி இருந்தது. அவ்வாறு நிதி ஏற்பாடுகள் இன்மையால் பூர்த்தி செய்யப்படாத வேலை பகுதிகளான உள்ளக மறைப்புக்கள் (Interior Partitioning) சிவிலின், கழிப்பறை மின்சாரம் மற்றும் நீர் வழங்கள் போன்ற அத்தியவசியமான பகுதிகள் காரணமாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. மீதியான வேலை களுக்காக 2019 ஜனவரி 21 அமைச்சரவை தீர்மானம் கிடைத்திருந்த துடன் மதுஉரைஞர் சேவையை பெற்றுக் கொள்வதற்காக திறந்த போட்டி அடிப்படை விலைகூறல் முறை கடைபிடிக்கும் படியும் அந்த அங்கீகாரத்தின் போது ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இது வரை மதிப்புரை சேவை வழங்குவதற்காக பெறுகை அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | மீதி வேலைகளில் பூர்த்தி செய்து கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தொழிநுட்ப பொறியியல் கட்டிடத்திற்கு முன்பகுதியில் பகல் பாதுகாப்பு நிலையம் வரையுள்ள பூந்தோட்டத்தின் அலங்கரிப்பு ஒப்பந்த வேலைக்காக ரூபா 3,093,310 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியாகிய 2019 மே 31 திகதி வரை அலங்கார விடயங்களை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டத்தின் கட்டம் I என நிறைவேற்றப்பட்டிருந்த துடன் அதன் முன் நடவடிக்கை கட்டம் II இன் மூலம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட விடயம் நிறைவேற்றப்படக் கூடிய விதத்தில் பணம் செலவிடப்பட வேண்டும். |
| (இ) | 2013 ஆண்டின் போது விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 30 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தும் இது வரை குறிப்பிட்ட விடயங்கள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாமையால் பயிற்சி பெறுவதற்கு மற்றும் போட்டிகள் நடாத்துவதற்கு வெளி விளையாட்டு மைதானங்களை வாடகைக்கு எடுப்பதற்கு நேரிட்டிருந்தது. | வெளி கூடைப் பந்து விளையாட்டு மைதானம் இன்னும் முழுமையாக பூர்த்தி செய்திருக்காமை யால் விளையாட்டு வீரர்களுக்கு தேவையான முறையில் பயிற்சி பெறுவதற்கு சந்தர்ப்பங்கள் வழங்குவதற்கு பல்கலைக் கழகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. | குறிப்பிட்ட குறிக்கோள் களை நிறைவேற்று வதற்காக வினைத் திறனுடன் பணம் செலவிடப்பட வேண்டும். |

**3.5 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சடப்பொருளியல் விஞ்ஞானம் மற்றும் பொறியியல் திணைக்கள கட்டிடம் (Material Science and Engineering Department Building) நிர்மாணிப்பதற்காக Design and Build மன்றத்திற்கு தேவையான விலைகூறல் ஆவணங்கள் தயாரிப்பதற்கு துறைசார் அறிவுடைய ஆட்கள் பல்கலைக் கழகத்தில் இருக்கும் போது பெறுகை வழிகாட்டல் ஆலோசனைகளுக்கு புறம்பாக ரூபா 752,000 தொகை செலவிடப்பட்டு வெளி நிறுவனம் ஒன்றில் இருந்து அச் சேவையை பெற்றிருந்தது. | பல்கலைக் கழகத்தின் ஆசிரியர் குழாம் இவ்வாறான மதியுரை சேவை வழங்குதல் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைத் தொகுதி (Policy) இன் பிரகாரம் மேற்கொள்ளப்படுவதுடன் மற்றும் நிறுவனத்துள் செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களுக்காக அந்த கொள்கை கோவைக்கு இணக்க மில்லாத வகையில் தனது சேவையை வழங்குவதற்கு அழைத்தல் கடினமாகும். | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஆலோசனையின் பிரகாரம் செயற்படுவதற்கு அலுவல்கள் திட்டமிடப்பட வேண்டும். |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பல்கலைக் கழகத்தின் கல்விப் பதவியிணியில் 426 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ் வெற்றிடங்களுக்காக ஒப்பந்த அடிப்படையில் 101 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். கல்விப் பதவியணி வெற்றிடங்களில் போதனாசிரியர்களின் வெற்றிடங்கள் 224 காணப்பட்ட துடன் அதற்காக வெளி விரிவுரையாளர்கள் சேர்க்கப்பட் டிருந்ததுடன், 2018 ஆண்டின் போது அதற்காக ரூபா 36,872,411 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | கல்விசார் சார் கல்வி சாரா உதவியாளர் வெற்றிடங்களை உரிய பிரிவுகளில் பிரிவு தலைவர்களில் கோரிக்கை களின் பிரகாரம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மற்றும் கல்விசாரா ஊழியர் வெற்றிடங்கள் உயர்கல்வி அமைச்சில் இருந்து கிடைக்கும் அட்டவணையின் மூலம் நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பல்கலைக் கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்வி பதவியணி 878 தொகை மற்றும் உள்ளவாறான பதவியணி 710 தொகையாக காணப்பட்டதால் 168 வெற்றிடங்கள் காணப்பட்டன. அந்த வெற்றிடங்களுக்காக ஒப்பந்த அடிப்படையில் 105 பேர் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் பல்கலைக் கழகத்தில் 21 பிரிவுகளில் மேலும் தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவிகளில் 44 வெற்றிடங்கள் காணப்பட்டன. | | வெற்றிடங்களை நிரப்புவதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறந்த உயர்கல்வி நிலையம் ஒன்றென சர்வதேச அடையாளம் ஒன்றினை நெருங்கும் குறிக்கோளுடன் பல்கலைக் கழகம் தனது செயற்பாடுகளை செயற்படுத்தும் போது 2018 ஆண்டின் போது உலக தரப்படுத்தல்களில் Webometrics ranking 2018 இல் எதிர்பார்த்த மட்டம் 2200 தொகை எனினும் நெருங்கியிருந்த மட்டம் 2713 தொகை எனவும் QS Asia ranking களில் மட்டம் 2018 இல் எதிர்பார்த்த மட்டம் 250 எனினும் நெருங்கியிருந்த மட்டம் 291-300 எனவும் காணப்பட்டது. | உலக பல்கலைக் கழக தரப்படுத்தலின் கீழ் மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் தரப்படுத்தலை அபிவிருத்தி செய்வதற்காக 2018 ஆண்டின் போது கீழ்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | பல்கலைக் கழக இணையத்தளம் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் தேவையை முன்னேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் பல்கலைக் கழகத்தின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்களின் எதிர்பார்த்த முன்னேற்றத்தை நெருங்குவதற்காக செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் முறையே 400 மற்றும் 25 தொகை எனினும் உண்மையான ஆய்வுகள் மேற்கொண்டிருந்த எண்ணிக்கை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் முறையே 108 பேர் மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் ஒருவர் மாத்திரம் காணப்பட்டது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆய்வுகள் மேற்கொள் வதற்கு எதிர்பார்த்த உள்நாட்டு மாணவர்களின் மற்றும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையை நெருங்கு வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் ஆய்வுகளுக் காக ஊக்குவிக்கும் புதிய முறைகளை செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | மாணவர்கள் ஆய்வு களுக்கு தொடர்பு படுத்துதலை அதிகரிப்பதற்காக வேலைத் திட்டம் ஒன்று ஏற்படுத்த வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது வெளியிடப் பட்ட ஆய்வு சஞ்சிகைகளின் எண்ணிக்கை 281 தொகையும், மாநாடுகள்/ கருத்தரங்குகளில் சமர்ப்பிக்கும் ஆய்வுகளின் எண்ணிக்கை 765 வரையும் 2010 ஆண்டு முதல் பெற்றிருந்த பேரண்ட் அனுமதிப்பத்தரங்களின் எண்ணிக்கை 30 வரையும் அதிகரித்துக் கொள்வதற்காக செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த போதிலும் நெருங்கியிருந்த மட்டம் முறையே 26 தொகை 55 தொகை மற்றும் 05 தொகையான குறைந்த மட்டத்தில் இருந்தது. | மொரட்டுவ பல்கலைக் கழகத்தினால் தற்போது பெற்றிருந்த பேரண்ட் அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையை காட்டும் ஆவணம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஆய்வுகளின் பங்களிப்பினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.2 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டத்தில் உள்ளடங்கி யிருக்காத ரூபா 12.8 மில்லியன் இற்கான 09 ஒப்பந்த வேலைகள் ஆண்டின் போது செயற்படுத்தி யிருந்ததுடன் ரூபா 41.17 மில்லியன் தொகைக்கான 37 ஒப்பந்த வேலைகளை செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் செயற்படுத்தியிருக்கவில்லை. | நிர்மாண வேலைச் செயற்திட்டங்கள் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங் கள் அனேகமான பல நிதி வருடங்களில் செயற்படுத்தப்படுகின்றன. ஏதேனும் ஒரு வருடத்திற்கான பல்கலைக் கழகத்திற்கு ஒதுக்கப்படும் மொத்த மூலதன ஏற்பாடுகளும் விடுவிக்கப் படாமல் ஏதேனும் செயற்திட்டத்திற்கான கிரய மதிப்பீடு/ ஒப்பந்தத் தொகை அந்த செயற்திட்டத் திற்காக ஒதுக்கி வைக்க முடியும். எனினும் அச் செயற்திட்டம் பல வருடங்களில் செயற்படுத்தப் படுவதினால் அது பல வருடங்களுக்கான பெறுகை திட்டத்தில் நிருபணமாகக் கூடும். | ஆண்டின் போது செயற்படுத்தக் கூடிய செயற்திட்டங்களை இனங்கண்டு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங் களினாலும் செயற்பட வேண்டி இருந்ததுடன் மீளாய்வாண்டு தொடர்பாக பல்கலைக் கழகத்தினால் தனது நோக்கொல்லையின் கீழ் காணப்படும் கருமங்கள் தொடர்பாக அறிந்திருந்த போதிலும் அவற்றை எவ்வாறு செயற்படுத்த வேண்டுமென செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தியிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட கருமங்கள் ஆண்டிற்கான நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட வேண்டும். |